வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் தொடங்கி 25 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி நேற்று (05.09.2023) நடைபெற்ற நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்ட வருவாய் அலகின் சார்பில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன் நினைவு பரிசினை காட்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் து.மு.கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள்ஏ.பி.நந்தகுமார், திருமதி.அமுலு விஜயன், மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.த.மாலதி, துணை மேயர்சுனில் குமார், 1வது மண்டல குழுத் தலைவர் திருமதி.புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருத்தணியில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

திருவள்ளூர், செப்.6-

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்ட மன்றத் தொகுதிக்குட்பட்ட திருத் தணியில் உள்ள சட்ட மன்ற உறுப்பினர் அலுவல கத்தில் வேளாண்மை பொறி யியல் துறையின்சார்பில்கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமங் களில் வேளாண் இயந்திர மயமாக்கல் உப இயக்கத் திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கு பவர் டில்லர், பவர் வீடர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கழக நிர்வாகி கள் உள்ளாட்சி பிரதி நிதிகள் என பலர் பங்கேற்றனர்.

மக்களைக் காப்பாற்ற - மாற்று அரசியலான திராவிட அரசியலை இந்திய மக்கள் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்து விட்டனர்!

என் இனிய தமிழ்ச் சொந்தங்களே ! பாராண்ட தமிழனுக்கு பாரதத்தை ஆளத் தகுதி இல்லை என்று சொல்வதே சனாதன தர்மம்! முன்பொரு நாளில் அப்படி இகழ்ந்தவரை போரிலே வென்று இமயத்தில் புலிக்கொடியை நாட்டி பழித்தவர்கள் தலையிலேயே கல் சுமந்து வரவைத்து கண்ணகிக்கு கோட்டம் அமைத்த தமிழ் மன்னனின் வழி வந்த தம்பி உதயநிதி ஸ்டாலின்... நாளை நடக்கப் போவதை இன்று பேசியதில் தவறென்ன இருக்கிறது?

வீரம் எங்களுக்கு விளையாட்டு, விவேகம் எங்கள் அரிச்சுவடி, தமிழ் எங்கள் தாய்மொழி. திராவிடம் எங்கள் நிலப்பரப்பு. யாதும் ஊரே யாவரும் கேளிர். இதுதான் எமது பண்பாடு. வந்தாரை வாழ வைப்பதே . எங்கள் கலாச்சாரம். ஒன்றே குலம் ஒருவனே தேவன். இதுவே எங்கள் மதம். சனாதன அரசியலுக்கு மாற்றாக நாம் நடத்துகின்ற திராவிட அரசியலே நமது அரசியல்! சனாதன ஒழிப்பே நாம் சொல்லும் சமநீதி.. சமதர்மம் மலர்வதற்கான வழி. மூன்று சதவீதத்தினருக்கு ஒன்றிய அரசு மூன்று முக்கிய அமைச்சர் பதவிகளை வழங்கி இருப்பது தான் சனாதன அரசியல் தர்மமா? கேட்பது நானல்ல மக்கள்! அத்தகைய சனாதன தர்மம் ஒழிக்கப்பட வேண்டுமா வேண்டாமா? இதை இந்தியாவிலுள்ள 97 சதவீதத்தினரும் எதிர்க்க வேண்டுமா வேண்டாமா?

அந்த நியாயமான தர்மமான ஜனநாயக ரீதியான குரலை இந்தியா முழுவதும் ஒலிக்க வைத்து... சனாதன தர்மத்தை ஒழித்து, இந்தியாவில் சோசலிசத்தை மலர வைப்பதே திராவிட அரசியலின் நோக்கமாகும்! அதற்கான குரல் ஒட்டுமொத்தமாக ஒலிக்கத் தொடங்கி ஆண்டுகள் பல ஆகிவிட்டன. அந்தக் குரல் இன்று தான் அமைச்சர் அமித்ஷா அவர்களின் காதல் விழுந்திருக்கிறது என்று சொன்னால் யார் அதை நம்புவார்கள்! நம்ப முடியாது என்று எல்லோருக்குமே தெரியும்!

அப்படியானால் இப்போது மட்டும் அமித்ஷா கொந்தளிப்பதற்கும். இந்துக்களை தூண்டிவிடும் வகையில் பேசுவதற்கும் என்ன காரணம்? பயம்.... பயம் மட்டுமே காரணம்!

தமிழ்நாடு முதல்வர் தன் கொள்கை முழக்கமான திராவிட அரசியலை பேசி வருவது அவரையும் அவரது சனாதன தர்ம அரசியலையும் ஆட்டத் தொடங்கி விட்டது என்பது தானே பொருள்! அரசியல் வேறு; மதம் வேறு என்பதை இந்தியர்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்து விட்டனர் என்பது தானே பொருள்? ஆரியக் கூட்டத்திடமும், சனாதன சன்மார்க்க அரசியலுக்குள்ளும் அடிமைப் பட்டுக் கிடந்த இந்திய மக்களைக் காப்பாற்ற 'திராவிட அரசியல்' என்ற மாற்று அரசியலை இந்திய மக்கள் ஏற்றுக் கொள்ள ஆரம்பித்து விட்டனர் என்பது இப்போதாவது புரிகிறதா?

தேசப் பிதாவின் சீரிய சிந்தனைகள் இனி மலரட்டும். காவிகள் அலறட்டும். ஏழையின் சிரிப்பிலே இறைவனை காண்போம். சாதி, மதம் அற்ற சமநீதி, சமதர்மம் கொண்ட ஆட்சியாளரை ஒன்றிய அரசின் பதவியில் அமர வைப்போம். கலகம் செய்வதற்கென்று ஒரு கடவுள். அவர் பெயர் நாரதராம். அந்த நாரதரின் கலகங்கள் நன்மையில் தான் முடியுமாம். அவரைத் தொழுகின்ற பக்த சிகாமணிகள் தான் இந்த ஆரியர்கள்.

இந்து என்றால். சனாதன தர்மா என சாரி... என்று நான் சொல்லவில்லை. டி.ஏ.சாமிநாத ஐயர் வெளியிட்ட ஜெம் அகராதியில் 467 ஆம் பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது'! பியர்ஸ் என் சைக்ளோபீடியா.... இந்துஸ்தானம் என்பது இமயத்துக்கும் விந்திய மலைக்கும் இடையே உள்ள ஒரு பகுதி என்று கூறுகிறது. இதை மறுப்பாரா அமைச்சர் அமித்ஷா? இதையெல்லாம் ஆராய்ந்து அறிந்து பேசுவதனால் தான் நமது முதல்வரைப் பார்த்து வடநாட்டு சனாதன தர்மம் அஞ்சுகிறது! அதனால்தான் ஸ்டாலின் இஸ் மோர் டேஞ்சரஸ் தென் கருணாநிதி. என்று சொன்னார்கள். தற்போது உதயநிதி அவர்களை பார்த்து என்ன சொல்லப் போகிறார்கள்?

வி.செ. குகநாதன்
திரைப்பட இயக்குநர்

'சங்கூத நேரம் பார்!' விரைவில் உன்றன் சடலத்தைப் போர்க்களத்தில் கழுகு மேயும்!

யாரைடா தலைகொய்வாய்? அறுப்பாய் நாக்கை?
ஆரியத்துப் பிண்டங்காள்! மிலேச்ச நாயே!
போரையன்றோ தொடுக்கின்றாய்! பிழைக்க வந்த
பேடியனே! மதவெறிகாள்! அமைதி வீழ்த்தி,
ஊரையெலாம் ஒற்றுமையைச் சீர்கு லைக்க
ஒருவன்பின் ஒருவனாகப் புறப்பட் டானா?
தேரிழுக்க மக்களெல்லாந் திரண்டாற் போலத்
தெருவெங்கும் தமிழினத்தார் ஸ்டாலின் பின்னே!
யாருக்கு அறைகூவல் விடுத்தாய்? மூடா!
அருந்தமிழன் தலைகேட்டா? போடா! முட்டாள்!
போருக்குப் புறப்பட்டால் கத்தி, ஈட்டி
புகழ்படைக்கும் கேடயத்தால் வெற்றி ஈட்டும்
நேருக்கு நேர்நின்று மோது கின்ற
நெறியினத்தில் உதித்தமகன் உதயா அன்றோ!
பேருக்கு வீண்பேச்சால் வாயால் கெட்டாய்!
பெட்டைபோல ஒளிந்திருந்து பிதற்றி னாயே!

காற்றுதனை எவன்தடுக்க வேலி யிட்டான்?
கடலுக்கும் எவன்தான்டா மூடி செய்தான்?
ஏற்றமிகு வானத்தைத் தொடுவ தற்கே
எவன்நின்று ஏணியினில் சாதித் திட்டான்?
நாற்றமுறு மலர்க்கூட்ட நலந்த டுக்க
நடவடிக்கை எடுத்தவன்தான் பாரி லுண்டா?
போற்றுதற்கு ரியமகனார் கழகந் தம்மின்
பயணத்தைத் தடுப்பதற்கு வலிமை உண்டா?
கலைஞர்தம் பேரனடா! போடா பேடி!
கருஞ்சிவப்பு இருவண்ணக் கொடியைத் தூக்கி
நிலைமாற்ற ஊரெங்கும் உலாநேர் வந்த
நெடுஞ்செழியப் பாண்டியனின் பரம்ப ரைதான்!
வலைவீழ்ந்த மாந்தர்கள் மீட்டு வென்று
வரலாறு படைக்கின்ற வீரன் தான்டா !
தலையெழுத்து மாற்றிட்ட கலைஞர் பேரன்!
தமிழினத்தில் தோன்றிட்டான்! படைத்தான் வெற்றி|

தீரரடா எம்தம்பி! தீண்டி னாலோ
சீறுசிங்க முறக்கவிட் டெழுதல் போலப்
பேரறிஞர் கூட்டமடா: எதற்கும் அஞ்சாப்
பெரியாரின் சீடரன்றோ நினைவில் கொள்வாய்!
சூரியனுக் கேநெருப்பு வைக்க எண்ணும்
சூழ்ச்சிகள்தாம் வெல்லுமோடா? காவிக் கூட்ட
ஆரியத்தின் ஆணவமா? கணவாய் தாண்டி,
ஆடுமாடு மேய்க்கவந்த கூட்டத் தோனே!

தலைதம்பி உயிர்பறிக்க எண்ணும் தீயோய்!
திராவிடத்தார் கைகளென்ன ஊன மோடா?
விலைமாதர் பெற்றெடுத்த பிள்ளை கூட
விரும்பாத வார்த்தைகளைப் பேச மாட்டான்!
கொலைவெறியால் கொக்கரிக்கும் மதம்பி டித்தோன்
தலைமகற்கா குறிவைத்தான்? இல்லை! இல்லை!
மலைநிகர்த்த திராவிடத்தா ரினத்தை அன்றோ,
மதிஇழந்து வம்புக்கே இழுத்திட் டானே!

சிங்கத்தைச் சீண்டுகின்ற மதக்கூட் டத்தார்
சிறுநரியின் தீயெண்ணம் பலிக்கா திங்கே!
தங்கத்தின் தரங்குறைக்க வெற்று வேட்டுத்
தகரங்கள் சலசலப்பா மதிப்பால் வெல்லும்!
பொங்கிவரும் காட்டாற் றைத்தடுப் பதற்குப்
பொத்திவைத்த மணல்மேடா அணையாய் நிற்கும்?
சங்கூத நேரம்பார்! விரைவில் உன்றன்
சடலத்தைப் போர்க்காட்டில் கழுகு மேயும்!
மோதிப்பார்! பகுத்தறிவு மலையை! உன்னால்
முடிந்தவரை முட்டிப்பார்! மின்சா ரத்தைக்
கோதிப்பார்! 'உயிரிருந்தால்! மதத்தின் பேரால்
குற்றேவல் புரிகின்ற தண்டச் சோறே!
வாதிடவா அறிவிருந்தால்! பெரியார் கொள்கை
வெடிமருந்துக் கிடங்கென்றே உணர்ந்து கொள்வாய்!
போதிமர முனிவருக்கே புத்தி சொன்ன
பழம்பெரும் கூட்டமடா கலைஞர் கூட்டம்!

கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்

சிவகங்கை மாவட்டத்தில் 145

விவசாயிகளுக்கு ரூ. 3 கோடியில் 145 பவர் டிரில்லர்கள்!

அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன்- தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ வழங்கினர்!

சிவகங்கை. செப்.6-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் 68 விவசாயிகளுக்கு ரூபாய் ஒரு கோடியே 47 லட்சத்து மதிப்பிலான 68 பவர் டிரில்லர்களை வழங்கி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது.

நாடு முன்னேற வேண்டுமானால் உணவு பஞ்சம் இல்லாத நாடாக இருக்க வேண்டும். அதுதான் ஒரு வளர்ச்சி பெற்ற நாடாக கருதப்படுகிறது.முன்பு இந்தியாவில் உணவுப்பஞ்சம் இருந்தது. தமிழகத்தில் அதை போக்கிடும் வகையில் தமிழக முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் பதவி ஏற்றார்கள். விவசாயத்தில் பல்வேறு நல்ல மாறுதல்கள், புதிய திட்டங்களை செயல்படுத்தி, விவசாயிகளுக்கு உதவிகளை செய்து வந்தார். வேளாண்மை துறை சிறப்பாக விளங்க வேண்டும் என்று பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அதை தொடர்ந்து செயல்படுத்தியும் வந்தார்; இதனால் இன்று தமிழகம் வேளாண்மை உற்பத்தியில் சிறந்த மாநிலமாக திகழ்கிறது.

விவசாயிகள் வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது இல்லை. காரணம் விவசாயத்தில் போதிய லாபம் இல்லை.அதை போக்கும்வகையில் தான் பல்வேறு திட்டங்களை கலைஞர் அவர்கள் கொண்டு வந்து செயல்படுத்தினார்கள். அதில் முதலாவதாக விவசாயிகளுக்கான இலவச மின் சார திட்டமாகும். தற்பொழுது கலைஞர் வழியில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் பதவி ஏற்ற இரண்டு ஆண்டில் இரண்டு லட்சம் இலவச மின்சார இணைப்புகளை தந்துள்ளார்.

முன்பு ஒரு பைசா மின் கட்டண உயர்த்தியதற்காக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரை எதிர்த்து விவசாயிகள் சங்க தலைவர் நாராயணசாமிநாயுடு போராட்டத்தை நடத்தினார். வள்ளல் என்று கூறும் எம்ஜிஆர் உயர்த்திய மின் கட்டணத்தை குறைக்கவும் இல்லை. அவர்களை அழைத்து பேசவுமில்லை. மாறாக துப்பாக்கி சூடு நடைப்பெற்ற தில் விவசாயிகள் பலியானார்கள்.

ஆனால் கலைஞர் முதல்வரானதும் விவசாயிகள் கோரிக்கை வைக்காமலேயே விவசாயிகளுக்கு இலவச மின்சார திட்டத்தினை அறிவித்தார் இது தான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மற்ற அரசியல் கட்சிக்கும் உள்ள வித்தியாசமாகும். விவசாயிகளின் நலன்களை என்றும் பேணிக்காக்கும் அரசாக தி.மு.க. ஆட்சிக்கு வரும் போதெல்லாம் திகழ்ந்து வருகிறது. நீர் பற்றாக்குறை ஏற்படக்கூடாது என்பதற்காக ஆழ்குழாய் கிணறு திட்டத்தினை கலைஞர் செயல்படுத்தினார்.

2006ல் கலைஞர் ஆட்சிக்கு வந்ததும் விவசாய கடன் ரூபாய் 7000 கோடி தள்ளுபடி செய்தார். இதனை பின்பற்றி இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் தொடர்ந்து கடன் தள்ளுபடி செய்தார்கள்.

2006 இல் பிரதமராக இருந்த மன்மோகன் சிங் அவர்கள் கலைஞர் வழியை பின்பற்றி விவசாயிகளுக்கு ரூபாய் 17ஆயிரம் கோடி கடன் தள்ளுபடி செய்தார். மேலும் கூட்டுறவுத்துறையின் சார்பில் வட்டியில்லா கடனும் வட்டி குறைந்த கடனும் வழங்கப்படுகிறது. எப்பொழுதுமே விவசாயிகளுக்கு மனிதநேயத் துடன் நேசக்கரம் நீட்டும் ஆட்சி கழக ஆட்சியாகும். முதல்வராக தளபதி அவர்கள் பொறுப்பேற்ற 2021 முதல் ஆண்டில் ரூபாய் 12ஆயிரம் கோடி பயிர் கடன் வழங்கப்பட்டது. சென்ற ஆண்டு 13ஆயிரத்து 500 கோடி கடன் வழங்கப்பட்டது. இந்த ஆண்டுரூபாய் 15 ஆயிரம் கோடி பயிர்க்கடன் வழங்குவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதை கூட்டுறவுத் துறை சிறப்பாக நிறைவேற்றும். இத்தகைய விவசாயிகளுக்கான கடன் கிடைப்பதில் ஏதும் பிரச்சினைகள் குறைகள் இருந்தால் விவசாயிகள் நேரடியாக மாவட்ட நிர்வாகம் அல்லது கூட்டுறவுத் துறை அதிகாரிகளை அணுக வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 10ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில்! 8 லட்சம் மின் இணைப்புகள் தான் விவசாயிகளுக்கு தரப்பட்டது. ஆனால் தளபதி அவர்கள் முதல்வராக பதவிஏற்ற இரண்டு ஆண்டுகளில் 2 லட்சம் விவசாய இலவச மின்இணைப் புகள் தரப்பட்டுள்ளது. எனவே பொதுமக்களும் விவசாயிகளும் தமிழகத்திற்கும் மக்களுக்கும் யார் நன்மை செய்கிறார்கள் உதவி செய்கிறார்கள் என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதற்கு ஏற்ப தாங்கள் நல்ல முடிவினை எடுக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் ஆட்சி தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் திருப்பத்தூர் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன் வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக வேளாண் துறை செயற்பொறியாளர்முத்துக்குமார் வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் உதவி செயற் பொறியாளர் பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணிஅமைப்பாளர் கே. எஸ். நாராயணன், ஒன்றிய செயலாளர் விராமதி மாணிக்கம், துணைச் செயலாளர் முத்துக்குமார், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் கண்ணதாசன்,கோட்டையூர் பேரூராட்சி கவுன்சிலர் ராமு உட்பட விவசாயிகள் அதிக அளவில் கலந்து கொண்டார்கள்.

மானாமதுரை யில் சட்ட மன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் 58விவசாயிகளுக்கு ஒரு கோடியே 21 லட்சம் மதிப்பிலான பவர் டிரில்லர்களை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன்கென்னடி , திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன்,ஒன்றிய செயலாளர்கள் எம்.ஏ. கடம்ப சாமி, வே.தமிழ்மாறன் மானாமதுரை நகர்மன்ற துணைத் தலைவர் பாலசுந்தர், இளையான்குடி பேரூராட்சி தலைவர் நஜ்முதீன், மானாமதுரை ஒன்றியக்குழு துணைத்தலைவர் முத்துச்சாமி, பேரூராட்சி மன்ற துணை தலைவர்கள் இபுராகீம்ரகுமத்துல்லாகான்,பேரூர் கழகச் செயலாளர் நாகூர் கனி மீனவரணி அண்ணாமலை, வேளாண்மை இந்திரா, வனராஜ் குமார், சண்முகம், ராஜா, பொறியாளர் நாகராஜன், உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

புலவர் க.முருகையன்
செப்டம்பர் 6 (1997)



இளமைப் பருவத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கையில் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழகத்தில் பணியாற்றி, பின்னர் கழகம் துவங்கியதும் தன்னை இணைந்துக்கொண்டு, ஆசிரியராக பணியாற்றிக் கொண்டே கழகப் பணியாற்றியவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களுடன் கல்லக்குடி போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

1967இல் திருவையாறு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, திறம்பட பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.